செ.வெ.எண் : 18/அக்டோபர் நாள் : 14.10.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## சீருடை பணியாளர் தேர்வுக்கு இலவச ஆன்லைன் பயற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

மத்திய / மாநில அரசுப் பணிக்காலியிடங்களுக்குரிய போட்டித் தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெற்று வந்த நிலையில் தற்போது கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக அப்பயிற்சி வகுப்புகள் ZOOM APP உள்ளிட்ட பல்வேறு அலைபேசி செயலிகள் மூலம் ஆன்லைன் வாயிலாக தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

தற்போது தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் அறிப்பு செய்யப்பட்டுள்ள இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பித்துள்ள மனுதாரர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் 09.10.2020 முதல் ஆன்லைன் வாயிலாக நடத்தப்பட்டு வருகிறது. இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க கடைசி நாள் 26.10.2020 ஆகும். மேலும் விவரங்களுக்கு https://tnusrbonline.org என்ற தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழும இணையதள முகவரி பார்த்து தெரிந்துகொள்ளவும். இந்த ஆன்லைன் இலவச பயிற்சி வகுப்பில் பங்கேற்க ஆர்வமுள்ள, போட்டித்தேர்வுக்கு தயாராகும் வேலைநாடுநர்கள் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை 8678960690 என்ற எண்ணில் வாட்ஸ்அப், குறுஞ்செய்தி வாயிலாகவும், 04567-230160 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு தங்களது பெயரை முன்பதிவு செய்து கொண்டு இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்று பயனடையலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**